# கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் - மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!








மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு தொகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு விழாவினை உறுதிமொழி ஏற்புக்கு பின் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார். சுமார் 1300 காளைகள் உள்பட 500 மாடு பிடி வீரர்கள் இதில் பங்கேற்றார்கள். காளைகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் தங்க காசு, சைக்கிள், டிவி உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ. ஷாலினி, நடிகர் விமல், தனச்செல்வம், ஜி.பி.ராஜா, திலீப் ராஜ கண்ணப்பன், எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மூவேந்திரன், ஆசை கண்ணன், வக்கீல் பாலாஜி, சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், ஆர்.கே.ஜெயராமன், தன்ராஜ் அன்பழகன், காவேரி, எஸ்.வி.சுதன், மதி வெங்கடேஷ், தவமணி, சசிகுமார், யூனியன் சேர்மன் வீரராகவன் மற்றும் பலர் குடும்பத்துடன் பங்கேற்றனர்.



திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட லால்குடியில் இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து லால்குடி அடுத்து வாளாடி சிவன் கோயில் அருகே நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு உரையாற்றினார். கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி எம்.எல்.ஏ., சௌந்தரபாண்டியன், லால்குடி நகரத் தலைவர் துரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சூர்யா, ஒன்றியச் செயலாளர் சண்முகநாதன், ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வன், கோல்டன் ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், மாநகராட்சி, கற்பக விநாயகா மஹாலில் மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கே.கே.செல்லப்பாண்டியன், எம்.லியாகத் அலி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம், கீழையூர் ஒன்றியம், பிரதாபராமபுரத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கிராமிய சுற்றுலாத் திட்டத்தில் வளர்ச்சி பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார்.
உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், இல.மேகநாதன், ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மரியசார்லஸ், பிரபுதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.